<u>செய்தி வெளியீடு 30.9.2007</u>

பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினர், தங்களது 15—அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 26.9.2007 முதல் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் டாக்டர்.திருமதி பூங்கோதை, போராட்டத்தில் ஈடுபட்ட பார்வையற்றவர்களை 29.9.2007 அன்று காலை நேரில் சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகளை அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.9.2007 அன்று சங்க பிரதிநிதிகளை சந்திக்க இருப்பதாகவும், எனவே போராட்டத்தை உடனே கைவிடுமாறும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சார்பில் சங்கப் பிரதிநிதிகளை கேட்டுக் கொண்டார். இதனை ஏற்று, பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினர் போராட்டத்தை உடனடியாக கைவிடுவதாக நேற்று (29.9.2007) அறிவித்தனர்.

இன்று (30.9.2007) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் நேரில் சந்தித்து, தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டனர். பார்வையற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் வாசிப்பாளர் உதவித்தொகையை உயர்த்துவதற்கும், பி.எட். வகுப்புகளில் 7 அரசுக் கல்லூரிகளில் மொத்தம் 35 இடங்கள் பார்வையற்றவர்களுக்கு 2008ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டுகளுக்கு நீட்டித்து வழங்கவும், அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கல்விக்கட்டண விலக்கு, தேர்வுக்கட்டண விலக்கு மற்றும் தேர்வு எழுத ஒரு மணி நேரம் கூடுதலாக ஒதுக்கக் கோருதல் சம்பந்தமாக ஏற்கனவே உள்ள அரசாணையை அனைத்து பல்கலைக்கழகங்களும் உடனடியாகப் பின்பற்றவும் மாண்புமிகு

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார்கள். மேலும், பட்டதாரி ஆசிரியர் மொத்தப் பணியிடங்களில் இரண்டு சதவீதம் பார்வையற்றோருக்கு வழங்குவது சம்பந்தமாகவும், சிறப்பு நிகழ்வாக பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் பார்வையற்றோர்களுக்கு வழங்குவது சம்பந்தமாகவும் பள்ளிக்கல்வித் துறையுடன் கலந்து ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், அரசு போக்குவரத்துக் கழகங்களில் கட்டணச் சலுகை வழங்குவது சம்பந்தமாக போக்குவரத்துத் துறையுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். மேலும், மற்ற கோரிக்கைகளை அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்குமென்றும் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினர் தங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர். இந்த சந்திப்பின்போது மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், முதலமைச்சரின் செயலாளர்கள், நிதித்துறைச் செயலாளர், சமூகநலத்துறை செயலாளர் மற்றும் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் ஆகியோர் இருந்தனர்.